அந்த அமைப்புகள் இந்த விளையாட்டுத் துறையோடு (Sports Department) தொடர்பு கொண்டால், எந்த வகையில் இந்த விளையாட்டுத் துறை அந்தக் கடமையிலே பங்குகொள்ள முடியும் என்பது ஆய்வு செய்யப்பட்டு அதற்குப் பின்னர் தீர்மானிக்கப்பட வேண்டும்.

9-15 மணி

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால்ராஜ் அவர்கள், மதுரை விளையாட்டு அரங்கத்திற்கு முதலமைச்சர் கலைஞருடைய பெயர் இருந்ததை ஞாபகப்படுத்தினார்கள். அந்த விளையாட்டு அரங்கம், பொது மக்களிடமிருந்து நிதி வசூலிக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதற்கு ''கலைஞர் கருணாநிதி ஸ்டேடியம்'' என்று பெயர் இருந்தது. எமர்ஜென்சி நேரத்தில் அந்தப் பெயர் அகற்றப்பட்டது. மறுபடியும் அரசு அந்தப் பெயரை வைப்பதற்கு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரத்தை நான் இப்போதுதான் அறிகிறேன். ஏற்கெனவே வைக்கப்பட்ட எந்தப் பெயராக இருந்தாலும், இடைக்காலத்திலே நீக்கப்பட்டிருக்குமானால் அது தொடர்வதற்கு இன்றைக்கு வழி இருக்கிறது, நியாயம் இருக்கிறது. உரிய ஆணை வெளியிடப்படும்.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே உள்ள நேரு விளையாட்டு அரங்கம் அகில இந்திய தரத்திலும் தகுதியிலும் இல்லையென்று சொல்லப்படுகிறது. குறைபாடுடையதாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்த விளையாட்டு அரங்கத்தை எல்லா வகையிலும் உயர்த்திட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக நான் விடை கூறமுடியாவிட்டாலும் கூட, அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் எழுதுவார்களேயானால், உரிய முறையில் தகுந்த நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்படும்.

புத்தனாம்பட்டி தனியார் கல்லூரி.

*6470 திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

முழுமையான அரசு மானியத்தில் நடத்தப்படுகின்ற புத்தனாம்பட்டி தனியார் கல்லூரியை அரசே ஏற்கும் திட்டம் உள்ளதா ?

1990 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படி ஒரு திட்டம் இல்லை.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தனாம்பட்டி கல்லூரி என்பது கிராமப்புறச் சூழலிலே இருக்கக் கூடிய கல்லூரி. கிராமப் புறத்திலே இருக்கக் கூடியவர்கள் அதிகமாகப் பயிலக் கூடிய கல்லூரி. ஆகவே, இது விஷயத்தில் அரசு ஏற்பதில் பணம் ஒரு பிரச்சினையாக இருக்கக் கூடாது என்ற முறையில் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்லூரியை அரசு ஏற்று நடத்துவது உசிதமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நிதி மட்டுமல்ல பிரச்சினை. அந்தக் கல்லூரியினுடைய முதல்வரும், அந்தக் கல்லூரியினுடைய நிர்வாகச் செயலாளரும் உடன்பிறப்புக்களாக இருக்கிறார்கள். அவர்களிடத்திலே சில மாறுபாடு. அது குறித்து, பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் விசாரணை நடத்தி கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். உதவி பெறும் கல்லூரி என்ற முறையில் அதனுடைய ஆசிரியர்களுடைய சம்பளத்துக்கான டிராப்ட்டில் கல்லூரி செயலர் மற்றும் முதல்வர் ஆகியோர் கையொப்பமிட வேண்டும். இவர்கள் இருவருக்கிடையே உள்ள கருத்து வேறுபாடு காரணமாக அந்த டிராப்ட்டில் முதல்வர் கையொப்பமிட மறுத்துள்ளார். இதன் விளைவாக ஆசிரியர்களும் மற்ற பணியாளர்களும் பாதிக்காமல் இருக்கும் பொருட்டு செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய உண்டியல்கள் தனி நிகழ்வாக மண்டலக் கல்லூரிக் கல்வி துணை இயக்குநரால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. எனவே ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குகின்ற அந்தக் கடமை இதனால் நிறைவேற்றப்படுகின்றது. அதற்கு மேல் அதை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமானால், ஒன்று, அந்த நிர்வாகம் அரசாங்கத்திற்கு ஒருமனதாக ஒப்படைக்க வேண்டும் அல்லது மிகப் பெரிய குற்றச்சாட்டுகள் ஏற்பட்டு அதை விசாரித்து அதன் காரணமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த இரண்டு கட்டத்திலேயும் எடுக்க முடியுமே தவிர, நாமாக விருப்பப்பட்டு செய்து விட முடியாத ஒரு நிலைமை இருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியில், அண்ணன் தம்பிக்கிடையே இருக்கக் கூடிய உறவுக் கோளாறு மட்டுமல்ல, அந்தக் கல்லூரியில் இருக்கக் கூடிய நிர்வாக முறைகேடுகளும் ஊழல்களும் அந்த முதல்வர் நினைத்தால் அவர் இஷ்டப்படி தேர்வு எண்களை

அதிகமாகப் போடுவதும், இப்படிப் பல கோளாறுகள் நடந்து அதற்காக சமீபத்தில் ஒரு கமிஷன் கூட விசாரித்து அறிந்து இருப்பதாகவும் அறிகிறேன். ஆகவே, இது விஷயமாக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அவர்கள் மீது, ஏதாவது வழக்குகள், கைது போன்றவை நடந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, எல்லாவிதத்திலும், அமைச்சர் அவர்கள் சொன்னதை வைத்துப் பார்த்தால் கூட அது முற்றிலும் இனி மேல் அவர்கள் கையிலே இருக்க முடியாத ஒரு கல்லூரி என்பதையும், அரசு அதை ஏற்று நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து விவரங்களும் ஆராயப்பட்டு சட்டப்படி என்ன செய்ய முடியும் என்பது பரிசீலிக்கப்படும், அதற்குப் பின்னர் தான் நான் விடை தரமுடியும்.

9-20 மணி.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, புத்தனாம்பட்டி கல்வி நிறுவனம் விஷயத்தில், இது அவரவர் குடும்பத் தகராறின் காரணமாகப் பல காலமாக அங்கேயுள்ள ஊழியர்களுக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களது ஊதியத்தையும் எடுத்திருக்கிறார்கள் இதனால் அங்கே படிக்கக் கூடிய மாணவர்களின் கல்வி முற்றிலும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இது அண்ணன் தம்பி தகராறு. அதனால் நிர்வாகம் கல்லூரியை மூடியிருப்பதால் மாணவர்கள் பாதிக்கப்படுவதால், உடனடியாக ஏதாவது ஒரு முறையில் நடவடிக்கை எடுக்க இந்தச் சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இருக்கிற இடர்ப்பாட்டுக்கு ஏதாவது ஒரு முறையைக் கையாளுவது என்பதை எந்த ஒரு அரசாங்கமும் ஏற்றுச் செயற்பட முடியாது முறையாக முயற்சிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

நீல்கிரியில் மாணவர்கள் பஸ் கட்டணம்

***1770 திரு. எம். கே. கரீம்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) நீலகிரியில் பயிலும் மாணவர்கள் பஸ் கட்டணத்தில் மூன்றில் இரண்டு பங்கு கட்ட வேண்டி இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகாவில் இருப்பதைப் போன்று குறைந்தபட்ச கட்டணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?